# காரைதீவு மக்கள் ஒன்றியம் - கனடா

## ஒன்று கூடல் 26.07.2014

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் காரைதீவு மக்கள் ஒன்றாய் இணைந்து கடந்த சில ஆண்டுகளாக ஒன்றுகூடல் நிகழ்ச்சியை நடத்தி, எம்மிடையே ஒற்றுமையையும் பரஸ்பர நல்லுணர்வையும் வளர்த்துவருகின்றோம். வழமைபோல் இவ்வாண்டும் ஜூலை மாதம் 26 ஆம் திகதி ஸ்காபரோவில் அமைந்துள்ள மோர்ணிங்சைட் பூங்கா – 7 ஆம் பகுதில் ஒன்றுகூடல் நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

இந்த ஒன்று கூடல் நிகழ்வில் சிறுவர் - இளையோர் - வளர்ந்தோர் அனைவரும் பங்குபற்றத் தக்க பல்வகை விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறும். உங்களது பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் இத்தினத்தை மிக்க மகிழ்வாகக் களிக்கும் வகையில் இவ்விளையாடடுப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. நாம் ஒழுங்குசெய்துள்ள வளர்ந்தோருக்கான போட்டிகள் நிச்சயம் உங்களை மகிழ்வடையச் செய்யும் என்பது எமது நம்பிக்கை. பின்வரும் விளையாட்டுப் போட்டிகளும் அவற்றுக்குரிய பரிசுகளும் உங்களுக்காகக் காத்திருக்கின்றன:.

மிட்டாயப்பை ஓட்டம், மென்பந்து எறிதல், பழம் பொறுக்குதல், ஓட்டம், பலூன் ஊதுதல், பணிஸ் உண்ணல், முட்டி உடைத்தல், கூடைப்பந்து போடுதல், சாக்கு ஓட்டம், கால்கட்டி ஓட்டம், நூல் கோர்த்தல், சமநிலை ஓட்டம், மெதுவான நடை, கயிறு இழுத்தல் எனப் பல...

நம் ஊரவர் - உறவினர் நண்பர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்திருந்து, மதிய உணவு உண்டு களித்து, இந்நிகழ்ச்சியைச் சிறப்பிக்குமாறு காரைதீவு உறவினர் - நண்பர்கள் எல்லோரையும் வருக வருக என 'காரைதீவு மக்கள் ஒன்றிய நிர்வாகசபை' உறுப்பினர்களாகிய நாங்கள் அன்புடன் வரவேற்கிறோம்.

ஒன்றாய்ச் சேர்வோம் - ஒற்றுமையை வளர்த்திடுவோம்

உறவை நேசிப்போம் - உயர்வாய் வாழ்ந்திடுமோம்.

காரைதீவு ஒன்றிய நிர்வாகசபை உறுப்பினர்
21. 06. 2014.

நன்றி வணக்கம்